

விழுப்புரம் வடக்கு மாவட்டம் ஒலக்கூர் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் வெள்ளி மேடு பேட்டையில் நடைபெற்ற செயலர்கள் கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், ஒன்றிய பெருந்தலைவர் சொக்கலிங்கம், ஒலக்கூர் மேற்கு ஒன்றிய செயலாளர் ராஜாராமன் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.

### சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்

# அன்பில் பொய்யாமொழியின் 25 ஆம் ஆண்டு நினைவு நாள்!

**மாவட்டச் செயலாளர் - – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் மாலை அணிவிப்பு ! மு.மதிவாணன் அறிக்கை!**

திருச்சி, ஆக. 28 -

திருச்சி மாநகரச் செயலாளர் மு.மதிவாணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், திராவிட இயக்க முன்னணித் தலைவர்களில் ஒருவரான அன்பில் தர்மலிங்கம் அவர்களின் புதல்வரும், தி.மு.க. இளைஞர் அணி தொடங்கப்பட்ட நாளில் இருந்து அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்தவருமான, முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், மாநில இளைஞரணி துணைச் செயலாளருமான, அன்பில் பொய்யாமொழி அவர்களின் 25ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, திருச்சி தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில், அவரது திருவுருவப் படத்திற்கு இன்று (28/08/2024 ) காலை 9:00 மணி அளவில் மாவட்ட செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் கழக நிர்வாகிகளுடன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகின்றது.

இந்நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பகுதி, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாவட்டப் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மருத்துவர் அணி இணைச் செயலாளருமான டாக்டர்.இரா. இலட்சுமணன் விழுப்புரம் நகரம், 22 வது வார்டு, அண்ணா நகரில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் புதிதாக கட்டப்பட்ட அங்கன்வாடி மையத்தை திறந்து வைத்தார். உடன் நகர செயலாளர் இரா. சக்கரை, நகர் மன்ற உறுப்பினர் ரியாஸ் அகமது, வார்டு செயலாளர் ஷேக், தொ.மு.ச. சலீம், முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் முபாரக் அலி, நகர சிறுபான்மையினர் அணி துணை அமைப்பாளர் அபுதாஹீர், நரேந்திரன், முன்னாள் வார்டு செயலாளர் அண்ணாமலை, துணை செயலாளர் கோட்டீஸ்வரன், மகளிர் அணி காயத்ரி சங்கர், பாலா முருகன், அப்துல் ஹக்கீம், அசாருதீன், அமீர் அப்பாஸ், அஸ்ரப் அலி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# ஒன்றிய, நகர வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம்!



**மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!**

கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 16.08.2024 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்டக் கழக செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி சேலம் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து ஒன்றியம் மற்றும் நகரங்களில் பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல்படி நடைபெற உள்ளது.

| தேதி /நாள் | நேரம் | ஒன்றியம் / நகரம் | இடம் |
|---|---|---|---|
| 29.08.2024 வியாழக்கிழமை | காலை 9.00 | இடங்கணசாலை நகரம் | சீனிவாசா திருமண மண்டபம், காடையாம்பட்டி, இடங்கணசாலை. |
| | காலை 11.00 | மகுடஞ்சாவடி ஒன்றியம் | ஆர்.கே.திருமண மண்டபம், மகுடஞ்சாவடி |
| | மாலை 4.00 | சங்ககிரி ஒன்றியம் | பி.ஆர்.எம். திருமண மண்டபம் சேலம் மெயின் ரோடு, சங்ககிரி |
| 30.08.2024 வெள்ளிக்கிழமை | காலை 9.00 | எடப்பாடி ஒன்றியம் | ஸ்ரீ வரதராஜபெருமாள் திருமண மண்டபம், வெள்ளக்கவுண்டனூர். |
| | காலை 11.00 | கொங்கணாபுரம் ஒன்றியம் | ஸ்ரீ என்.பி.டி. மஹால், கொங்ணாபுரம் |
| 31.08.2024 சனிக்கிழமை | மாலை 4.00 | நங்கவள்ளி ஒன்றியம் | எம்.என்.வி.மஹால், வனவாசி |
| 02.09.2024 திங்கட்கிழமை | காலை 9.00 | மேச்சேரி ஒன்றியம் | விஜயமஹால், மல்லிகுந்தம் ரோடு, மேச்சேரி |
| | காலை 11.00 | மேட்டூர் நகரம் | கற்பகம் திருமண மண்டபம், மேட்டூர் |
| | மாலை 4.00 | கொளத்தூர் ஒன்றியம் | எஸ்.எஸ்.மஹால், கொளத்தூர். |
| 03.09.2024 செவ்வாய்கிழமை | காலை 9.00 | தாரமங்கலம் ஒன்றியம் | ஜே.பி. திருமண மண்டபம், துட்டம்பட்டி |
| | காலை 11.00 | தாரமங்கலம் நகரம் | செங்குந்தர் மண்டபம், தாரமங்கலம் |
| | மாலை 4.00 | எடப்பாடி நகரம் | நடராஜன் திருமண மஹால், நைனாம்பட்டி, எடப்பாடி. |

இக் கூட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர்க் கழக செயலாளர்கள். நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக முன்னோடிகள் மற்றும் கழக செயல்வீரர்கள் அனைவரும் அந்தந்த ஒன்றிய, நகர மற்றும் பேரூராட்சிகளில் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**டி.எம்.செல்வகணபதி எம்.பி.**
செயலாளர்
சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க.

### புதுக்கோட்டை நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்திய

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

**புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையில் நடந்த கூட்டத்தில் தீர்மானம்!**



புதுக்கோட்டை, ஆக. 28 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி,மு.க சார்பில் பொது உறுப்பினர் கூட்டம் மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் புதுக்கோட்டை மாவட்ட திமுக அலுவலகம் பெரியண்ணன் மாளிகையில் மாவட்ட அவைத் தலைவர் அரு.வீரமணி தலைமையில் நடைபெற்றது. புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் அனைவரையும் வரவேற்று ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். . இந்நிகழ்வுகளில் மாநகரச் செயலாளர் ஆ.செந்தில்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கழக இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர். கவிதைப்பித்தன், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ.

மாநில விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர் த.சந்திரசேகரன், சொத்து பாதுகாப்புக் குழு உறுப்பினர் அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் செ.அசோக் பாண்டியன், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கே.ஆர்.என்.போஸ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சுப.சரவணன், சு. சண்முகம் மாவட்ட துணைச் செயலாளர்கள் பி.ராஜேஸ்வரி, எஸ்.எஸ். கருப்பையா, மாவட்ட பொருளாளர், துணை மேயர் எம். லியாகத் அலி, பொதுக்குழு உறுப்பினர்கள் தென்னலூர் எம்.பழனியப்பன், என்.சாத்தையா, இராசு. சந்தோஷ், ஆர்.செல்லத்துரை, ஒன்றியச் செயலாளர்கள் கே. எஸ்.சந்திரன், மு.க.ராம கிருஷ்ணன், தவ .பாஞ்சாலன், வெ.முத்து கிரு ஷ்ணன், எம்.பரமசிவம். என். சேட்டு, ஓ.எஸ்.வெங்கடாசலம், அ. இளங்குமரன், கே.பி.அய்யப்பன், ஆர் ஆர்.சாமிநாதன், சி. சண்முகம்,

உ. முருகேசன், பி.அண்ணாத்துரை, முகம்மது ரிஷா, , அ.ரெத்தினம், எம். எம்.பாலு, டாக்டர் செ. குறிஞ்சிவாணன், டாக்டர் மு.க. முத்துக் கருப்பன், வி.ஜி.ஆர்.மணிவண்ணன், வி.என்.எம்.பாலு, செந்தாமரை பாலு, சி. அரங்கநாயகம், மஜீத் முபாரக், கவிவேந்தன், டி.எம்.ஆர். ராமமூர்த்தி, எஸ்.வி.ஆர். ஸ்டாலின், புத்தாம்பூர் சுப்பையா, அ. பிரபா, தவசுமணி, எம். வேலுச்சாமி, வே.ராஜேஷ்,

மு.கலைஞர் கருணாநிதி, இளஞ்சேரன் முத்துசாமி, விளாப்பட்டி சிவா, ஜெயலெட்சுமி தமிழ்ச்செல்வன், மாலா ராஜேந்திரதுரை, ராஜேந்திர சோழன், அஸ்ரப் அலி, வெற்றி செல்வன், டாக்டர் அமானுல்லா, ராய.முத்துக் குமார், மு.ராஜதுரை, தெய்வானை, ராயல் சபா, ஏ.எம்.சிற்றரசு, வடவாளம் க.செ.மணிமாறன், சுமோ பாலு, கி.சுப்பிரமணியன், கை. பழனிச்சாமி, புதுநகர் குமார், எம்.ரமேஷ், ஆ. மரிய எட்வின், விஏடிசி ராஜேந்திரன், பிரபு கேண்டின் பன்னீர்,ஓ. ஆறுமுகம், சுகி (எ) சுருமாறன், காதர் கனி, க.செ.கலியமூர்த்தி, பழனிவேலு, கமலா பாண்டியன், இதயம் அப்துல்லா, இனியன், எழில் ராஜா தேன்கனிப்பட்டி ராஜா, மாநில மாவட்ட ஒன்றிய மாநகர வட்டக் கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

1.கழக அமைப்புகளில் அனைத்து அணிகளுக்கும் மாநகரம், ஒன்றியம், பேரூர் கழகங்கள் தோறும் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் தேர்வு செய்வது என தீர்மா னிக்கப்படுகிறது.

2. முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை மாவட்டம் முழுவதும் பொதுக்கூட்டங்கள் நடத்துவது, தெருமுனை கூட்டங்கள், நலத்திட்ட உதவிகள் வழங்குவது என தீர்மானிக்கப்படுகிறது.


3.செப்டம்பர் 15 கழக முப்பெரும் விழா அன்று மாநகரம், ஒன்றியம், பேரூர், வட்ட,கிளை கழகங்கள் தோறும் கழக கொடியேற்றி கொண்டாடுவது என தீர்மானிக்க ப்படுகிறது.

4. பெருமைமிகு புதுக்கோட்டை நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தி நடைமுறைப்படுத்திய கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கும், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என். நேரு அவர்களுக்கும் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட திமுக கழகம் சார்பில் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்ற ப்படுகிறது.

5.கீரனூரில், விராலிமலையிலும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திரு உருவச்சிலை நிறுவுவது என இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது.

6.புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா தந்தையார் வைரக்கண்ணு அவர்களின் மறைவிற்கு மாவட்ட கழகம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.

# கலைஞர் எனும் வரலாறு!



**நா**நயம் உடையவர் !
நாட்டின் நன்மைக்கு உரமானவர் !
நாற்பதையும் வெல்லும் திராவிட மாடலை உருவாக்கியவர் !
நாளைய சமுதாயத்திற்கு வழிகாட்டியானவர் !
நம் ஒவ்வொருவர் மனதிலும் நீங்கா ஒளியானவர் !
நல் வழி கூறும் பல காப்பியங்களை படைத்தவர் !
நல்லதோர் அரசை நடத்தி காட்டியவர்!
நாடகம், நடிப்பு, இலக்கியம் அனைத்திலும் முதன்மையானவர் !
நாட்டுப் பெண்களுக்கு அளித்த எண்ணற்ற திட்டத்தால் உலகையே திரும்பிப் பார்க்க வைத்தவர்!
நீங்காதிருந்த சாதி மத பேதத்தை அறவே நீக்கிக் காட்டியவர் !
நம் உயிர் காக்க காப்பீட்டுத் திட்டத்தை உருவாக்கியவர் !
நம் மேல் திணிக்கப்பட்ட இந்தித் திணிப்பை எதிர்த்துக் காட்டியவர் !
நம் தாய் மொழியாம் தமிழுக்குச் செம்மொழி மாநாட்டினை நடத்திக் காட்டியவர் !
நமது திராவிடத்தலைவரை பெற்றெடுத்து நாட்டிற்கென அர்ப்பணித்தவர் !
நவீன தமிழ்நாட்டின் சிற்பியானவர் !
நமது கழகத்தினருக்கு முரசொலி கடிதங்கள்
மூலம் என்றும் நெருக்கமானவர் !
நீக்கமற ஏழைகளின் நெஞ்சில் நிலையானவர் !
அனைத்திற்கும் மேல்
அவர் நாணயமானவர் அவர் தான் கலைஞர் !

இன்றைய செய்தியே நாளைய வரலாறு என்றவர் முத்தமிழறிஞர் கலைஞர்
நமது கழகத்தலைவர்
அவர் வரலாற்றின் தொடர்ச்சி
நாணயத்தில் பொறிக்கப்பட்டிருக்கும்
“தமிழ் வெல்லும்” எனும் கையெழுத்து
அவர் வரலாற்றின் சாட்சி

வரலாறு தொடரும் !



**முனைவர்.பி.பழனியப்பன்**
மேனாள் அமைச்சர்
தருமபுரி மேற்கு மாவட்டக் கழக
செயலாளர்

# 31 ஆம் ஆண்டு நினைவு நாள்



காஞ்சிபுரம் **கே.டி.எஸ்.மணி**

மறைவு – 28.8.1993

★★★

இறுதி மூச்சு உள்ள வரை
**பெரியார், அண்ணா, கலைஞர்**
வழி நின்ற சுயமரியாதைச் சிங்கம்!
தம் உடலைத் தானம் செய்து
புகழுலகின் உச்சிக்கே சென்றுவிட்ட உத்தமர்!

**அ.இராமமூர்த்தி – இரா.அருளரசன்**
உறவினர்கள், நண்பர்கள். (வி.ம்)